இ.சக 90-3

16/3/91

ஜேர்மனியில்
1990 செப்ரெம்பரில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப்பட்டது.

தேசியவாதத்தில் எழும் சில அடிப்படைப் பிரச்சனைகள்!


KUMAR, S. DHEVA
Kleiva - 03
6090 FOSNAVÅG
Norway


நாம் சுவிஸிலிருந்து வெளிவரும் மனிதம் பத்திரிகையின் ஆசிரியர் குழு சார்பில் முதன் முதலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். ஐரோப்பவில் இருந்து வெளிவருகின்ற ஒரு சில நீங்கலாக ஏனைய பத்திரிகைகளைப் போன்றே மனிதமும் இதயம் மிக்க மனித சமுதாயத்தின் பிரசவிப்பை நோக்கிய கருத்துக்களுடன், பிரச்சினைகளை இயன்ற அளவுக்கு மார்க்சிய பார்வையில் அணுகுவதற்கு எத்தனிக்கின்றது. இவ் எத்தனிப்பில் ஏற்பட்ட சில அனுபவங்களே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும். மேலும் உங்களுடனான விவாதங்களினூடாக புதிய அனுபவங்களைத் தொகுக்கும் நோக்குடன் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

நாம் பதினைந்து, இருபது மாதங்களுக்கு முன்புவரை மாரக்ஸிசத்தை ஒரு வாய்ப்பாட்டுச் சூத்திரமாகக் கருதினோம். மார்க்கஸ், ஏங்கல்ஸிற்குப் பின் லெனின், ஸ்ராலினும் தொடர்ந்து மாவோவும் மார்க்சி சத்திற்குப் பெருத்த அனுபவங்களைத் தொகுத்தளித்தனர். இந்த அனுபவத் தொகுப்பை உலகின் சகல நாடுகளின் புரட்சிக்கும் தேவையான சகல அம்சங்களும் அடங்கிய பொக்கிஷமாகவே கருதினோம். ருஸ்சிய, சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு முறைகளே அரசு உதிர்ந்து போகும் வரைக்குமான கட்சி அமைப்பு முறைகள் என எண்ணினோம். இந்த வகையில் இலங்கை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் சந்தர்ப்பவாதப் போக்குகள் துரோகத்தனங்கள் தவிர, கட்சி அமைப்பு முறைகளிலும் அவர்களது மார்க்ஸியப் பார்வைகளுடனும் ~~(ஏ- தேசிய இனப்பிரச்சினைகளுக்கு ஸ்டாலினின் நான்கு வரையறைகள்)~~ உடன்பட்டோம். 1917 அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் சமூகத்தின் நிர்மாணியாக விளங்கிய ஸ்டாலினின் நடவடிக்கைகளை அப்பழுக்கற்ற மேன்மையான சாதனைகளாக மதித்தோம். குறைந்த பட்சம் ஸ்டாலினின் மீதும் சோவியத் சோவியத்பொருளாதாரத்தின் மீதும் மாவோ வைத்த விமர்சனங்களை சரியான அர்த்தத்துடன் நாம் அறிந்திருக்கவில்லை. "நாட்டின் ஸ்தல நிலமைக்கு ஏற்ப புரட்சியை முன்னெடுத்தல்" என்ற மாவோவின் கூற்றின் உண்மையான உள்ளடக்கத்தைப் புரிந்திருக்கவில்லை.

எமது நாட்டின் தேங்கிய அரசியல் நெருக்கடி நிலமைகளையும், உலகின் சோசலிச சமூகங்களின் தொடர்ச்சியான சீரழிவுகளையும் ஜீரணிக்க முடியாத வேதனையில் முளை விட்ட ஆதங்கத்துடன்

தேடல்கள் என்ற புதிய தேவைக்குள் எமது பார்வையைச் செலுத்தினோம். எமது ஆசானாக வழிகாட்டியாக வரலாற்றை முன் நிறுத்தினோம்.

பழைய பண்டித காலத்து செய்யுள் வடிவிலிருந்து பாரதியின் எளிய முறைக் கவிதைக்கும் பின் அதிலிருந்து புதுக் கவிதையின் தோற்றமும் கவிதையில் ஏற்பட்ட வளர்ச்சி அல்லது பரிமாணங்கள் என்கிறோம். வளர்ச்சிப் போக்கில் பழைய செய்யுள் மரபுக்கவிதை இலக்கணங்களின் மாற்றங்களும் நெகிழ்வுமே இன்றைய புதுக் கவிதைக்கு அங்கீகாரம்.

அண்மையில். பதினைந்து, இருபது வருடங்களுக்குள் யதார்த்த இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சையையும் அணுகலாம். காலம் சென்ற பேராசிரியர் க.கைலாசபதி கலை இலக்கியங்கள் பிரச்சினைகளையும் பிரச்சினைக்கான தீர்வையும் சுட்டி நிற்கும் பட்சத்தில்தான் அது ஒரு யதார்த்த இலக்கியமாகிறது என்கிற கருத்தை முன்வைத்தார். "கந்தன் கருணை, பொறுத்தது போதும்" போன்ற நாடகங்கள் இதற்கு உதாரணங்களாக்கலாம். ஆனால் அண்மைக்கால இலக்கியக் கர்த்தாக்கள் புதிய பரிமாணங்களாக யதார்த்த இலக்கியத்திற்கு "பிரெடக்" (Fredeck) என்பவரின் பார்வையை முன்வைக்கின்றனர். பிரச்சினைகளையும், பிரச்சினைக்கான காரணங்களையும் சூழ்நிலைகளையும் யதார்த்தமாக முன்வைத்து அதற்கான தீர்வை மக்களின் சிந்தனைகளுக்கு விடவேண்டும் என்பதே அதன் சாராம்சமாகும். மார்க்ஸிய நோக்கில் அதில் உண்மை இருப்பதாகவே கருத முடிகிறது. இன்றைய சமூகப் பிரச்சினைக்கு சமூக மாற்றம்தான் தீர்வு, புரட்சிதான் வழி என்பதை மக்கள் அறிவுபூர்வமாகச் சிந்திப்பதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டும். இல்லையேல் புரட்சிக்கு மக்களை அணிதிரட்டும் பட்சத்தில் மக்கள் ஏவப்பட்ட அம்புகளாக அல்லது வரலாற்றுச் சூழலின் இயக்கப் போக்கில் அடித்துச் செல்லப் பட்டவர்களாக மட்டுமே செயல்பட முடியும். புரட்சிக்குப் பிந்திய சமூகங்களின் சீரழிவுகளுக்கு இதுவும் ஒரு காரணமாகலாம்.

இவ்வாறே மரபுவழி இலக்கணங்களில், இலக்கியங்களில் இயங்கியல் மாற்றங்கள் ஏற்படும் போதே மொழிகளும், கலை இலக்கியங்களும் இன்னும் சமூகங்களும் கூட வளர்ச்சியை நோக்கி முன்தள்ளப்படுகின்றது. இத்தகைய வளர்ச்சிப் போக்கிற்கு மார்க்சிசமே உற்ற துணை என்பதைச் சமூக விஞ்ஞானிகளும், சமூகப் பிரக்ஞை மிக்க கலைஞர் ~~கர்த்தாக்களும்~~ மொழி

யியலாளர்களும், கலை இலக்கிய கர்த்தாக்களும் உணர்வர்.

ஆனால் மார்க்சிசம் மட்டுமே காலங்கள் முழுமைக்கும் ஒரே இலக்கணங்கள் கொண்டதாகக் கருதப் படுவதே வியப்பிற்குரிய விஷயமாகும். மார்க்சிசத்தின் ஆதாரமான இயங்கியல் போக்கிற்கே இது முரணானது. ஆரம்பகால மார்க்சிசக் கட்சிகள் பலவும், மார்க்சிசத்தை இதே போக்கில் நோக்குவதானாலேயே மார்க்சிசர்களை மரபு மார்க்சிசர்கள் என்றும், புதிய மார்க்சிசர்கள் என்றும் நோக்க வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. மாவோவை அங்கீகரிக்கும் மார்க்சிசர்கள் கூட மார்க்சிச இலக்கணத்தில் ஏற்படுத்தப்பட்ட இயங்கியல் பரிணாமம் காரணமாகவே சீனாவில் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றதை உணர்வதாகத் தெரியவில்லை. தொழிலாள வர்க்கத்தை பெருந்தொகையாக உள்ளடக்கிய "நகரப் புறத்தில் இருந்து புரட்சியை முன்னெடுத்தல்" என்று மரபாகிப் போன ஐரோப்பிய புரட்சியில் இருந்து வேறுபட்டு விவசாயிகளை அதிகமாகக் கொண்ட கிராமப் புறத்தில் புரட்சியை ஆரம்பித்து நகரத்திற்கு நகர்த்தப் பட்டதே சீனப் புரட்சி.

மேற்படி அம்சங்களை நோக்கும் போது மூன்றாம் உலக நாடுகளின் விடிவுக்குத் தடையாய் இருப்பது அந்நாடுகளின் மார்க்சிசக் கட்சிகளின் மரபு வழிப்போக்கும் ஒரு காரணம் என்பதனை அறிய முடிகிறது. நாம் அறிந்தவரை இலங்கை இந்திய கம்யூனிஸ்ட கட்சி அமைப்பு முறைகள் இன்னும் மரபுவழிப் பட்டதாகவே இருக்கிறது. சீனா, ரஸ்யா என்று தமது சார்பு நாடுகளுக்குத் துதிபாடும் போக்கு இன்னும் இருக்கவே செய்கிறது. சீன அரசு 1971ல் ஜே.வி.பி கிளர்ச்சியின் போதும், அண்மையில் தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் போதும் இலங்கை அரசுக்கு ஆயுத உதவி வழங்கியமையையும் நியாயப் படுத்துகின்ற போக்குகள் சீனச் சார்புக் கட்சிகளுக்குள் இருப் பதும் இந்தியாவில் கூடங்குளம் பகுதிகளில் ரஸ்சிய அணு ஆலை அமைப்பதை ரஸ்ஸிய சார்புக் கட்சிகள் நியாயப் படுத்துவதும் போன்ற பல நோக்கங்களும் மரபு வழித் தன்மையை உணர்த்தி நிற்கின்றன. இந் நடவடிக்கைகளால் தமது சொந்தத் தேசங்களில் இக் கட்சிகள் தனிமைப் பட்டுப் போவதை சீன, ரஸ்ஸியக் கட்சிகளோ, அரசுகளோ உணர்வதில்லை. பதிலாகத் தமது மேலாண்மையை ஏனைய நாட்டுக் கம்யூனிஸ்ட கட்சிகள் மீது திணிப்பதிலேயே கவனம் செலுத்துகின்றன.

இன்னும் Anti Inteilectualism என்னும் போக்கும் இலங்கை

இந்திய மார்க்சிசக் கட்சிகளிடம் மட்டமின்றி சர்வதேசக் கட்சிகளிடமும் ஆழப்பதிந்திருக்கின்றது. இதனால் மரபு வழி மார்க்சிசக்கட்சிகள், கட்சிக்குள் அடங்காத மார்க்சியர்களின் கருத்துக்களின் விமர்சனங்கள் நியாயமானவை எனக் காணப்பட்டாலும் அவற்றை உள்வாங்கிக் கொள்வதில்லை. ஆனால் லெனின் கூட றோசா லக்சம்பேர்க் போன்றோருடன் வளமான விவாதங்களை மேற்கொண்டிருந்தார்.

மேலும் இவர்கள் தேசிய இனப் பிரச்சினையில் ஸ்டாலின் காலத்து நான்கு வரையறைகளையே இன்னும் தேசிய இனங்களுக்கான ஆதாரங்களாக நிறுவுவதுடன் இன ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டங்களை முன்னெடுக்கவும் தயங்குகின்றனர். எல்லாம் சோசலிசத்தில் தீர்ந்துவிடும் என்னும் பிரமையுடையவர்களாக உள்ளனர். ஒரு புறத்தில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைக் கையாள்வதில் இடதுசாரிக் கட்சிகளின் கையாலாகத்தனமே இலங்கை இனப்பிரச்சினை இவ்வளவு மோசமான நிலையை எட்டியதற்கான காரணம் எனலாம்.

எமது தேசத்தின் நெருக்கடி மிகுந்த இக்காலகட்டத்தில் மார்க்சிசத்தை வாய்ப்பாட்டுச் சூத்திரமாகக் காணுகின்ற மரபுவழி மார்க்சிச அணுகுமுறையிலிருந்து எம்மை விடுவித்துக் கொண்டு எமது இனத்தினதும் தேசத்தினதும் விடிவை, விடுதலையை நோக்கிய தேடல்களிலும் ஆய்வுகளிலும் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். சர்வதேச மார்க்சிய ஆய்வாளர்களின் கருத்துக்களை சுய சார்பு நிலையிலிருந்து... கறாரான விமர்சனத்தினூடாக கிரகித்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய எமது தேசம் மீதான தேடல்களில்.......

1.எமது இனத்தின் விடுதலை.....

ஐக்கிய இலங்கையுடன் கூடிய சுய நிர்ணய உரிமைப் போராட்டமா? அல்லது தனிநாட்டுப் பிரிவினைக்கான போராட்டமா? மலையக மக்களின் பிரச்சினையை எப்படி நோக்குவது? முஸ்லீம் மக்களின் பிரச்சினையை எப்படி அணுகுவது? சிங்கள முற்போக்குச் சக்திகளின் தொடர்பைப் பேணுவது எப்படி? நம்பிக்கைக்குரிய சக்திகள் யார்? பாசிசத்தில்

விருந்து மீள்வது எப்படி மீள்வது? சமூகத்தில் மேலாண்மை செலுத்துகின்ற சாதிப்பிரச்சினைகள், ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் போன்ற சமூக ஒடுக்குமுறைகளை தகர்ப்பது எப்படி?

தேசம் மீதான நெறியான வர்க்க ஆய்வுகள் இன்னும் செய்யப்படாத நிலையில் இலங்கையில் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியமா?

இலங்கையை...

அரைக் காலனித்துவமாகக் கொள்வதா? அல்லது நவ காலனித்துவமாகக் கொள்வதா? அல்லது இரண்டுமேயற்ற சார்புநிலைப் பொருளாதார நாடு என்பதா?

இவ்வாறு சர்ச்சைக் குரிய பல கேள்விகள் இன்று எம்மை உரசிப் பார்க்கின்றன. தொடர்ச்சியான விவாதத்தின் ஊடாகவே இத்தேடல்கள் முயற்சியில் நாம் முன்னேற்றம் காணமுடியும் என நம்புகிறோம். "மனிதம்" நான்கின் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக இதற்கான அறைகூவலை விடுத்திருந்தோம். பரீட்சார்த்தமாக "தமிழ் மக்கள் வாழ்வில் மேலாதிக்கம் பெறும் முரண்பாடுகள்" என்னும் விவாதத்திற்குரிய கட்டுரையையும் பிரசுரித்திருந்தோம். இதற்கான பதில் விவாதங்கள் இன்னமும் வந்து சேராதது வேதனைக்குரிய விடயம். தேடல்கள், ஆய்வுகள் என்பதெல்லாம் வெறும் எழுத்தளவிலும், பேச்சளவிலும் இருப்பதில் அர்த்தமில்லை. உண்மையான மனந்திறந்த விவாதங்களினூடாகவே இத்தேடல்கள் முயற்சியில் நாம் வெற்றி பெறமுடியும் என்று மீண்டும் அழுத்துகிறோம்.

தொடர்ந்து சர்வதேச ரீதியில் தேடல்கள் முயற்சியில் மார்க்சித்தில் எழும் சில பிரச்சினைகளைப் பார்ப்போம். சர்வதேச ரீதியில் மார்க்சியர்களுக்கு எழும் பிரச்சினைகள் சில...

ரஸ்யா உடபட கிழக்கு ஐரோப்பிய நாடுகளினதும், சீனாவினதும் நிலமைகள் புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் சோசலிச நிர்மாணம் தோல்வியைக் கண்டுள்ளது என்கிற உண்மையை நிதர்சனப் படுத்துகின்றன.

இப்புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் ஸ்ராலின், மாவோவிற்குப் பின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் முதலாளித்துவ சக்திகள். அதனால் சோசலிச சமுதாயங்களில் முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகின்றன சர்வதேச கம்யூனிச அல்லது மரபுவழி மாரக்சிய இயக்கங்கள்.

ரஸ்யாவில் ஸ்ராலின் இறப்புக்கும், சீனாவில் மாவோவின்

மறைவிற்கும் மறுதினமே முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டுவிட்டது என்பது விஞ்ஞான பூர்வமானதா? இயங்கியல் விதி இதை அங்கீகரிக்குமா? இல்லை இதற்கான அமைக் காரணங்களை 1917 அக்டோபர் புரட்சிக்குப் பிந்திய காலத்தில் இருந்தே குறிப்பாக ஸ்ராலினின் பதவிக் காலத்திலிருந்தே நோக்கவேண்டும் என்பது இயக்கங்கள் சாராத மார்க்சிய ஆய்வாளர்களின் அல்லது புதிய மார்க்சியர்களின் கருத்தாகும்.

தொழில் துறையில் விவசாயக் கூட்டுப் பண்ணை, கனரக உற்பத்தி முறைகளிலான பொருளாதார மேம்பாட்டு கருத்தியலை மையப்படுத்தினார் ஸ்டாலின். தொழிற்துறை வளர்ச்சியை நோக்கிய போக்கில் பலவகை அடக்குமுறைகள் மேற்கொள்ளப் பட்டன. மேற்பார்வையாளர்கள், இயக்குனர்கள், அதிகாரிகள் என தொழிற்சாலை நிர்வாகிகள் உருவாக்கப் பட்டனர். தவிர்க்க முடியாத தேவையின் விளைவாக உருவாக்கப்பட்ட இவர்கள் காலப்போக்கில் கரைந்து போவதற்குப் பதிலாகசமூகத்தில் சலுகை பெற்ற அதிகாரவர்க்கமாக மாறினார்கள். இவ்வதிகாரி களின் பிள்ளைகளே மேற்படிப்பைத் தொடர்வதற்கும், தொழிலநுட்பவியலாளர், எஞ்சினியர்கள் ஆவதற்குமான வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். இம்மேலதிகாரிகள் சம்பளம் உட் பட அனைத்திலும் சலுகை பெற்று கட்சி அங்கத்துவத்தைக் கூடப் பெற்றனர். இந்நிலமைகள் பற்றி பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர் களின் சுருக்கமான கூற்றை நோக்குவோம்.

"ஸ்டாலின் சகாப்தம் தொடங்கியது. நாட்டில் கனரகத் தொழில் மயமாக்குவதற்கும், விவசாயக் கூட்டுப் பண்ணைகட்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. தேவையான மூலதனத்திரட்டலுக்குப் "பிற்போக்கான" விவசாயிகள் கசக்கிப் பிழியப்பட்டனர். பாசிச அபாயம் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டு நாடு ராணுவ மயமாக்கப் பட்டது. கட்சிக்குள்ளும் மக்கள் மத்தியிலும் சனநாயக உரிமைகள் அதிக அளவில் பறிக்கப் பட்டன. லட்சக்கணக்கான கட்சி உறுப்பினர்களும் பொது மக்களும் உரிய விசாரணையின்றிக் கொல்லப்பட்டனர். இவற்றினூடே பாசிசம் வீழ்த்தப் பட்டதும், உலக வல்லரசுகளில் ஒன்றாக ரஸ்யா தன்னை நிறுவிக் கொண்டதும், தொழில் மிகப் பின் தங்கிய நிலையிலிருந்து மிக வளர்ச்சியடைந்த நிலைக்கு மாறியதும் வியக்கத்தக்க அளவிற்குக் கல்வி, மருத்துவம் ஆகிய அடிப்படை வசதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டதும் வரலாறாயின. ஆனால் இவை எதுவும் சோசலிச உறவுகள் நிலைநாட்டப் படுவதிலும் பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாய் உயர்வதிலும்

லெனினின் காலத்தைக் காட்டிலும் ஓர் அடி கூட முன்னெடுத்து வைக்க உதவவில்லை. மாறாகப் பல அடிகள் பின்னோக்கி செல்வதே நிகழ்ந்தது.

ரஸ்யாப் பொருளாதாரம் பற்றி விமர்சித்த மாவோ ரஸ்ய சோசலிசப் பாதையின் மூன்று தவறுகளைச் சுட்டிக் காட்டினார்.

1. சோசலிச மூலதனத்தைத் திரட்டல்.
2. தொழில் வளரச்சி + உடமைகள் சமூகமயமாக்கப்பட்ட சர்வதிகாரம் = சோசலிசம் என்கின்ற உற்பத்திச் சக்திகள் கோட்பாடு.
3. பாட்டாளி வர்க்கக் கட்சி பற்றிய கோட்பாடு.

மேற்படி கருத்துக்கள், தகவல்களின் அடிப்படையில் நோக்குகையில் ரஸ்ஸியாவில் சோசலிச நிர்மாணம் தோல்வியடைவதற்கான காரணங்கள் ஸ்ராலின் காலத்திலும் இருந்தன என்பது தெளிவாகின்றது.

மேலும் அ.மார்க்ஸின் வேண்டுதல் ஒன்றை நினைவுபடுத்திக் கொள்வோம். (பக்.15, ரஸ்யாவில் நடப்பதென்ன?)

",ன்றைய பல்வேறு சிக்கல்களையும் உள்வாங்கிக் கொண்டு நம்மை நாம் செழுமைப் படுத்திக் கொள்ளாமல் வரட்டுச் சூத்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டிருந்தோமானால், மார்க்சியமே நெருக்கடிக்குள்ளாகி விட்டது எனப் பிரச்சாரம் செய்யும் நமது எதிரிகளுக்கு துணை போனவர்கள் ஆவோம். லெனின் நிர்மாணித்த ரஸ்சியாவிலும், இதன் படிப்பினைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு கலாச்சாரப் புரட்சி மேற்கொள்ளப் பட்ட மாவோவின் சீனாவிலும் முதலாளியம் மீட்கப்பட்டு விட்டதென்றால் இன்றைய சகாப்தத்தில் சோசலிச நிர்மாணம் சாத்தியமே இல்லையோ என்கிற அவநம்பிக்கையை நாம் விளைவித்து விடக் கூடாது. ஸ்டாலின் செத்த அடுத்த நாளும், மாவோ மறைந்த மறுநாளும் முதலாளியம் அந்தரத்திலிருந்து குதித்துவிட்டது என்பது இயங்கியலாகாது. ரஸ்சியப் பாதையிலிருந்து சரியாக விலகிய மாவோவின் பாதையிலும் ஏதேனும் குறைபாடுகள் இருந்ததா என்பதை ஆராய்வதில் நாம் தயக்கம் காட்டக்கூடாது. இதன் தோற்றக் காரணிகளை கண்டடைய 1917விருந்தும், ஏன் பாரிஸ் கம்யூனிலிருந்தே தொடங்கவேண்டும். கோத்தா வேலைத்திட்டம் குறித்து மார்க்சும், பாட்டாளி வர்க்க சர்வதிகாரம் குறித்து றோசா லக்சம்பேரக், காவுட்ஸ்கி ஆகியோருடன் லெனினும் புரிந்த வளமான விவாதங்களில் தொடங்க வேண்டும். எல்லாவற்றிற்கும் ஏற்கனவே பதில்

சொல்லப்பட்டு விட்டது என்கிற மமதை இன்னுமா நமக்குத் தேவை?.

சீன நிலமைகளை ஆராயும் போது........

1950களின் பிற்பகுதியில் இருந்தே ரஸ்ஸிய வழிப்பட்ட சோசலிச நிர்மாண முறைகளில் இருந்து தன்னை விலத்திக் கொண்ட சீனா...

1. சோசலிச கட்டுமானத்தில் பாட்டாளிவர்க்க சர்வதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது.
2. அரசியலை ஆணையில் வைப்பது.
3. வர்க்கப் போராட்டத்தை கேந்திர கண்ணியாக்குவது.
4. மூளை உழைப்பிற்கும், உடல் உழைப்பிற்கும், நகரத்திற்கும் கனரகத் தொழிலுக்கும் விவசாயத்திற்குமான வேறுபாடுகளைத் தீர்ப்பது.

போன்ற கோட்பாட்டு விளக்கங்களை முன்வைத்து சுய சார்பு சோசலிசக் கட்டுமானத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. 1966 - 1967களில் கலாச்சாரப் புரட்சியையும் முன்னின்று நிகழ்த்தினார் மாவோ. இதே வகைப் புரட்சிகள் இன்னும் பல தடவைகள் தொடர்வதன் மூலமே சோசலிசத்திற்கான அடிக் கட்டுமானத்தை நிறுவ முடியுமென்றார். மாவோவின் மறைவிற்குப் பின்பு சோவியத் ரஸ்சியாவின் சீர்குலைவுத் தன்மைகள் சீனாவிலும் கண்டு கொள்ளப் பட்டது. சோவியத் ரஸ்சியாவின் படிப்பினைகளைப் பெற்று பொருளாதாரவாதம் பற்றிய சரியான விமர்சனத்தை முன்வைத்து அடிப்படைப் பிரச்சினையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட சீனாவிலும்தான் சோசலிச உறவுகள் நிறுவப்படவில்லை.

மாவோ பல வகையில் ஓர் ஜனநாயகவாதியாகத் திகழ்ந்தார் என்பதற்கு "நூறு மலர்கள் மலரட்டும்", நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்" என்ற கூற்றுக்களே சான்றாதாரமாகும். அவரது சம காலத்தவரும், இன்று நாமும் கூடத் தெளிவு பெறும் அளவுக்கு "பொருளாதாரவாதம்" பற்றித் துல்லியமாக விளங்க வைத்தார். கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு சோசலிசக் கட்டுமானத்திற்கு அவசியமான மேல்கட்டுமானம் அடிக் கட்டு மானம் ஆகியவற்றை ,ணைப்பது பற்றி ஆராய்ந்திருந்தார். பாட்டாளிவர்க்க கட்சி பற்றிய மார்க்சியர்களின் மரபுவழிப் பார்வையை வெறுத்ததினால் கட்சியே அனைத்திலும் மேலானது என்கிற போக்கைக் கண்டித்தார். இக் கருத்துக்களை எல்லாம் முன்வைத்தபோது மாவோ என்கிற தனிமனிதன் வளர்ச்சியடைந்த அளவிற்கு கட்சி உறுப்பினர்கள் வளர்ந்திருக்கவில்லை. கட்சி

வளரச்சியடைய வில்லை. மாவோவின் கருத்துக்கள் மக்கள் சமூகத்திடம் பரவலடையவில்லை. புரட்சிக்குப் பிந்திய காலத்தில் மக்கள் சமூகத்தின் கருத்துக்கள் ஆட்சியைச் சென்றடையவில்லை. மேலும் "தனிநபர் வழிபாடு" தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. கடசி மீதான மரபுவழிப்பாதையை மாவோ சாடிய போதும், கட்சியின் உண்மைச் செயல்பாடுகள் மரபுவழிப்பட்டதாகவே அமைந்திருக்கின்றது. 1950களின் பிற்பட்ட காலம் வரை ரஸ்ஸியாவுடன் கொண்டிருந்த தாக்கம், பொருளாதாரப் போக்கு இன்னும் சீனக் கம்யூனிஸ்ட கட்சிக்குள் நிலவுவதாகவே கருதப் படுகின்றது. மேலும் கிடைக்கக் கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டே மாவோ காலத்துத் தவறுகளையும் கண்டு கொள்ள முடியும்.

சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி.

சமுக ஏகாதிபத்தியம் ஆகிய சொற்பிரயோகங்களுக்கான கருத்தாக்கங்கள் பற்றி நோக்குவோம். இவற்றிற்கு உரிய சரியான கருத்தாக்கங்களை லெனினும் பின்னர் மாவோவும் வரையறுத்து விட்டதாகவே மார்க்சிய கட்சியமைப்புகள் கூறி வந்திருக்கின்றன. நாமும் ஏற்றிருந்தோம். ஆனால் இன்றைய நெருக்கடியான காலகட்டம் ஓர் மீள்பார்வைக்கான உந்துதலை வேண்டி நிற்கிறது. லெனினும் மாவோவும் இவை மீதான வரையறைகளைக் கொடுத்திருக்கின்றார்களா? என்ற கேள்வியை நோக்கி நிற்கிறது. ரஸ்யாவிலோ சீனாவிலோ சோசலிச உறவுகள் இல்லை என்பதை ஏற்கும் அதே வேளை அங்கு ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் முதலாளித்துவ மீடசிதானா? என்கிற சந்தேகத்தை எழுப்பி நிற்கிறது. ரஸ்யா ஓர் சமுக ஏகாதிபத்தியம் என்பதற்கான ஆதாரங்கள் போதுமானதா?

முதலாளித்துவ பொருளாதாரமானது மூன்று தீர்மானகரப் பண்புகளை உள்ளடக்கியது.

1. உற்பத்திச் சாதனங்கள் உட்பட சொத்துக்கள் தனியுடமை
2. சமுதாயத்தின் மொத்த மூலதனம் பல போட்டியிடுகிற அல்லது போட்டியிடும் உள்ளடக்கம் கொண்ட பல அலகுகளாக பிரிந்து இருக்கும்.
3. அனைத்தையும் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் தமக்கென உற்பத்தி சாதனங்கள் எதுவுமற்றவர்களாக இருக்கின்றார்கள்.

ஆனால் கோபர்சேவின் இன்றைய காலத்திற்கு முன்புவரை ரஸ்யாவிலும் சரி, இன்னும் சீனாவிலும் சரி மேற்படிப் பண்புகளில் இரண்டும் தவிர்க்கப் பட்டுள்ளது. பதிலாக,

1. சொத்துக்கள் பொதுவுடமையாகவும், கூட்டுறவுடமையாகவும் உள்ளன.
2. மூலதனங்கள் ஒன்றோடென்று போட்டி போடுவது போன்ற உறவைக் கொண்டிருக்கவில்லை. உழைப்பு சக்தி உட்பட பண்டங்களின் விலை நிர்ணயிப்பு போட்டியடிப்படையில் தீர்மானிக்கப் படுவதுமில்லை. இந்நிலமையில் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி என்று எப்படி வரையறுப்பது

இதை ஒரு அரச முதலாளித்துவ வர்க்கம் என்கிற பிரான்சிய

மார்க்சிஸ்ட் சார்ல்ஸ் பெத்தலஹீம். ஆனால் அமெரிக்க ஆய்வாளர் பௌல் சிவிஸி போன்றோர் சோவியத் யூனியன் சோசலிச சமூகமோ, முதலாளித்துவ சமூகமோ அல்லது இது வரலாற்றின் விளைபொருளாய் உருவான "ஒரு தனித்துவமான சமூக உருவாக்கம்: என்கின்றனர்.

ரஸ்யாவை சமூக ஏகாதிபத்தியம் என்கின்றனர். ரஸ்யாவைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியம் என்கிற அர்த்தத்தில் அந்நிய நாடுகளில் குறிப்பாக வறிய மூன்றாம் உலக நாடுகளில் மூலதனம் இட்டுள்ளதா? அப்படி மூலதனம் இட்டு சுரண்டப்படும் இலாபமானது மீண்டும் ரஸ்ஸிய சமூகத்திற்குச் சேருகிறதா? அல்லது ஆட்சி அதிகார வர்க்கத்திற்கு சேருகிறதா?/ எடுத்துக்காட்டாக அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது 1978,79ம் ஆண்டுகளில்வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் ரஸ்யாவின் முதலீடு .23%மாகவும், குறைவளர்ச்சி நாடுகளில் செய்யப்பட்ட முதலீடு .04%மாகவும் காணப்படுகின்றது. இவை சார்பாக மேலும் பேராசிரியர் அ.மார்கஸின் கேள்விகளை நோக்குவோம். (ரஸ்ஸியாவில் நடப்பதென்ன பக்கம் 29,39)

மாவோ ரஸ்யாவின் சோசலிச நிர்மாணத்தில் ஏற்பட்ட தவறுகளிலிருந்தும், குருசேவின் திரிபுவாதப் போக்கிலிருந்தும் பெற்றுக் கொண்ட படிப்பினைகளின் விளைவாக இதே நிலமைகள் சீனாவிலும் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் குறித்து வலுவாக ஆய்வு செய்தார். மார்க்சியரிடையேயும் சோசலிசக் கட்டுமானத்திலும் பொருளாதாரவாதம் முதன்மை பெறுவதைக் கண்டித்தார்.

*. சோசலிசக் கட்டுமானத்தில் பாட்டாளிவர்க்க சர்வதிகாரத் தின் கீழ் புரட்சியைத் தொடருவது.
*. அரசியலுக்கு முதன்மை அளிப்பது.
*. வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது.
*. மூளையுழைப்பிற்கும், உடலுழைப்பிற்கும்
*. நகரத்திற்கும், கிராமத்திற்கும்.
*. கனரகத் தொழிலுக்கும், விவசாயத்திற்குமான வேறுபாடு களைத் தீர்ப்பது பற்றிய கோட்பாட்டு விளக்கங்களை முன்வைத்தார்ஃ.

இப்படியாக சோசலிச நிர்மாணத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய பல அம்சங்களை முன்வைத்தபோதும், தொடர்ந்து இன்றைய நெருக்கடி மிகுகாலம் அவரது சிந்தனைக் கெட்டாத பல அம்சங்களை உணர்த்தி நிற்கிறது. சோசலிச கட்டுமானத்தின் புதிய வர்க்கங்களின் ஆய்வு பற்றியும், அதில் முதலாளித்துவம்

மீட்கப்படுவதால் உருவாகும் உற்பத்தி முறையின் இயக்கவிதிகள் குறித்தும் சோசலிச நிர்மாணம் சார்பாக கோட்பாட்டு உருவாக்கம் (Theorization) எதையும் அவர் செய்யவில்லை போன்ற கருத்துக்களை இன்றைய மார்க்சிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ரஸ்யா சார்பாக அவர் முன்வைத்த முதலாளித்துவ மீட்சி, சமூக ஏகாதிபத்தியம் ஆகியன மார்க்சிய விஞ்ஞானத்திற்கு அவரால் முன்வைக்கப்பட்ட நிருபிக்கப்படாத கருதுகோள்களாக்வே காணப்படுகின்றன. "சமூக ஏகாதிபத்தியம்" என்னும் சொற்பிரயோகத்தை லெனினும் செய்துள்ளார் என்பதும் உண்மையே. லெனினும், மாவோவும் கூறினார்கள் என்பதற்காக ஏற்கக்கூடிய காலகட்டமல்ல இது. சமூக ஏகாதிபத்தியம் ஆகிய சொற்பிரயோகங்கள் பற்றியும் சோசலிசக் கட்டுமானம் பற்றிய கருத்தாக்கங்களும் மீளாய்வுக்கு உட்பட்டிருக்கும் காலமே இது.

உலகின் பல பாகங்களிலும் உள்ள மார்க்சியர்களிடமிருந்தும் வரக்கூடிய கருத்துக்களை கறாரான விமர்சனத்தினூடே ஆய்வுக்கும் விவாதத்திற்கும் உள்ளடக்குவோம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று எமது தேசம் மீதான விடுதலையை நோக்கிய தேடலில் ஆரோக்கியமான விவாதங்களைத் தொடருவோம். சந்தர்ப்பங்கள் சாதகமாகும்போது நேரடியான கூட்டுவிவாதத்தினூடாகவும், ஏனைய சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளினூடாகவும் இத்தகைய தேடல் முயற்சியில் விவாதத்தில் பங்கெடுப்பது பற்றியும் பத்திரிகையாளர்கள், வாசகர்கள், ஆக்கதாரர்களைக் கேட்டுக் கொள்கிறோம். எந்நாடுகளில் இருந்தாலும் சரி எங்கள் இத்தகைய தேடல் முயற்சிகளை துச்சமாகவும் சின்னப் பிள்ளை விளையாட்டாகவும் கருதாமல் ஆரோக்கியமான விவாதத்திற்கு வழிகோல வேண்டியது தமது கடமை என்பதை எமது மூத்த தலைமுறைகள் உணரவேண்டும்.

வணக்கம்

எழுத்துப் பிழைகள் திருத்தப்படவும்.